# திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்
# சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**14.06.2019ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் –**

**முன்னிலை : திரு. Y. சுரேந்திரன் BE., தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) திருவண்ணாமலை நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் : –**

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு**

**293.** நாட்குறிப்புகள்:
(அ) நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் – 2019 மாதக்குறிப்பு
(ஆ) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் – 2019 மாதக்குறிப்பு

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம்**

**294.** இந்நகராட்சியில் மத்திய மாநில அரசின் திட்டங்கள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர தினசரி நாளிதழ்களில் கீழ்க்கண்ட பணிகளுக்கு விளம்பரம் செய்தமைக்கு விளம்பர நிறுவனமான M/s. Enthrall சென்னை நிறவனத்திற்கு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பட்டியல் தொகை ரூ |
|---|---|---|
| 1 | DEFOT முறையில் R.O.Plant அமைத்தல் (Automatic Vending Machines ) | ரூ. 36,225 |
| 2. | தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம், 2018–19ன் கீழ் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் | ரூ. 86,940 |
| 3. | நகராட்சி பகுதியில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் (9074) எண்ணிக்கை | ரூ. 42,790 |
| 4. | DBFOT முறையில் சன்னதி தெருவில் உள்ள பழைய நகராட்சி அலுவலகம் உள்ள இடத்தில் கல்யாண மண்டபம் கட்டுதல் | ரூ. 90,336 |
| 5. | இந்நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 30 எண்கள் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் Mini வாகனம் LCV வாகனம் சப்ளை செய்தல் | ரூ. 36,590 |
| 6. | திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக 3 எண்கள் Mini Excarator வாகனம் சப்ளை செய்தல் (திருத்தி வாசிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது) | ரூ. 30,492 |
| | மொத்தம் | ரூ. 3,23,373 |

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்

## தீர்மானம்

**295.** தணிக்கை கட்டணம் அரசு ஆணை எண். 62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.01.1994 மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதி முறைகள் 62 (ஏ) மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம் 2014 பிரிவு 17ல் வெளியிட்டுள்ள திருத்தங்களின்படியும் 1992–93 முதல் தணிக்கைப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர படிகள் 50% தொகை தணிக்கைக் கட்டணமாக நகராட்சி நிதியிலிருந்து அரசு நிதிக்கு செலுத்தப்பட வேண்டும் என தணிக்கை ஆண்டு 2017–18 தணிக்கை பத்தி எண்.76ல் ரூ.202790/– (இரண்டு லட்சத்து இரண்டு ஆயிரத்து எழுநூற்று தொண்ணுறு மட்டும்) செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை செலுத்த மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 7025/2016/சி2**

**அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

## தீர்மானம்

**296.** இந்நகராட்சியின் தீபத் திருவிழா – 2018க்கு நகராட்சியின் பணிகள் குறித்து தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு நாளிதழ்களுக்கு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. தினமணி நாளிதழ் (Express Publication) | -- | ரூ. 22,260/– |
| 2. தினத்தந்தி | -- | ரூ. 20,000/– |
| 3. மாலை முரசு | -- | ரூ. 27,300/– |
| மொத்தம் ரூ | -- | ரூ. 69,560/– |

**அலுவலகக் குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**297.** இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் அலுவலர் கணினிகள் ஆகியவற்றிற்கு வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் (Antivirus Software) பொருத்தப்படவேண்டும் என 27.05.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் – 12 அவர்களின் ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, இந்நகராட்சிக்கு தேவையான 37 எண்ணிக்கையிலான Antivirus Softward கீழ்க்கண்ட பிரிவுகளில் உள்ள கணினிகளுக்கு வாங்க வேண்டியுள்ளதாலும் அதற்கான தோராய செலவின தொகை ரூ. 1,50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. பொதுப்பிரிவு | -- | 10 எண்ணிக்கை |
| 2. நகரமைப்பு பிரிவு | -- | 3 எண்ணிக்கை |
| 3. தகவல் தொழில்நுட்ப பிரிவு | -- | 6 எண்ணிக்கை |
| 4. பொறியியல் பிரிவு | -- | 5 எண்ணிக்கை |
| 5. தணிக்கை அறை | -- | 2 எண்ணிக்கை |
| 6. ஆணையாளர் அறை | -- | 1 எண்ணிக்கை |
| 7. அலுவலக வரிவசூல் மையம் | -- | 2 எண்ணிக்கை |
| 8. அக்னிலிங்கம் வரிவசூல் மையம் | -- | 1 எண்ணிக்கை |
| 9. டவுன் ஹால் பள்ளி வரிவசூல் மையம் | -- | 1 எண்ணிக்கை |
| 10. நகரநல அலுவலர் அறை | -- | 1 எண்ணிக்கை |

11. வருவாய் பிரிவு -- 2 எண்ணிக்கை
12. பொது சுகாதாரப் பிரிவு -- 3 எண்ணிக்கை

**அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**
**ந.க.எண். 2498/2019/சி1**

**தீர்மானம்**

**298.** இந்நககாட்சி பொதுப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், லேசர் பிரிண்டர்கள், டாட்மெட்ரிக்ஸ் பிரிண்டர்கள், யுபிஎஸ், ரவுட்டர், மற்றும் மோடம் (Modum) ஆகியவைகளுக்கு வருடாந்திர பராமரிப்பு (Annual Maintenance Contract) 23.04.2019 முடிவடைந்துவிட்டது. எனவே கீழ்க்குறிப்பிட்டுள்ள கணினி சம்மந்தப்பட்ட பொருள்களுக்கு பராமரிப்பு செய்ய ஒப்பந்தப்புள்ளி பெற்று ஆண்டு பராமரிப்பு செய்ய மேல் நடவடிக்கை எடுக்கவும், அதற்கான ஆண்டு பராமரிப்பு தோராய செலவினம் ரூ. 2,50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No | Section | Desk top | Name of the Printer | | Scanner | Modem / Router | LAP TOP | UPS |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Laser | DMP | | | | |
| 1 | General Section | 10 | 10 | | | 1 | | 1-5 KVA |
| 2 | Information Technology | 6 | 2 | | 1 | 1 | 3 | 1-5 KVA |
| 3 | Revenue Section | 2 | 2 | | | | | |
| 4 | CFC Counter | 2 | 1 | 2 | | | | |
| 5 | Public Health Section | 3 | 2 | | | | | 1-3 KVA |
| 6 | Engineering Section | 5 | 4 | | 1 | | | 1-2 KVA |
| 7 | Town Planning Section | 3 | 2 | | | | | |
| 8 | Agnilingam Collection centre | 1 | | 1 | | 1 | | |
| 9 | Audit Room | 2 | 2 | | | | | 1-5 KVA |
| 10 | Commissioner Room | 1 | 1 | | | | | |
| 11 | Town hall Collection Centre | 1 | | 1 | | | | |
| 12 | MHO Room | 1 | | | | | | |
| | | 37 | 26 | 4 | 2 | 3 | 3 | |

**அலுவலகக் குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் தொகை வழங்கலாம்
3. மன்றத்தின் அனுமதி நோக்கி அவசர அவசியம் காரணமாக இருப்பதால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

**299.** திருவண்ணாமலை நகரம் வார்டு எண்.4, பிளாக் எண். 35 நகரளவு எண். 1890/1பி4 பரப்பு 1.99 ஏக்கர் பரப்பில் செங்கம் ரோடு பெரும்பாக்கம் சாலையில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 491/2018/வேம3 நாள் 26.04.2019ல் ம.வ./ந. ஊ.து.இ (வே.ம) எண். 261/2019 என்ற மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி வரைபடம் மற்றும் நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. மனைப்பிரிவு பதிவு செய்யலாம்
2. மனைப்பிரிவில் அமையப் பெற்றுள்ள சாலைகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்கள் சிவாலயம் எண்டர்பிரைசஸ் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. மேற்படி மனைப்பிரிவில் 28 குடியிருப்பு மனைகளும் 1 கடைகளும் அமைக்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான சர்வே உட்பிரிவு கட்டணம் ரூ.31,500/– வீதம் ரூ.15500/– 16.05.2019ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
4. மேற்படி மனைப்பிரிவில் அமையும் தெருக்கள் மற்றும் பூங்கா இடங்கள் அனைத்தும் 861/2019 நாள் 30.03.2019 மற்றும் 1551/19 நாள் 17.05.2019 ஆகிய தானப் பத்திரம் நகராட்சி ஆணையரின் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. மனைப்பிரிவு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களால் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் கால்வாய்கள், கல்வெர்ட், குடிநீர் பகிர்மான குழாய் ஆகிய பணிகள் நகராட்சி மூலம் செய்ய மனுதாரர் ரூ.12,35,000/– ஐ வைப்பு நிதியாக 30.10.2019 அன்று செலுத்தியுள்ளார். மேலும் மின்கம்பம் அமைக்க ரூ.1,93,830/– நாள் 28.10.2018ம் மின் வாரியத்திலும் செலுத்தப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைக்க நகராட்சியில் ரூ.33,000/– நாள் 08.10.2018யிலும் மனைப்பிரிவு அமைக்க ரூ. 30,000/– நாள் 08.10.2018ல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19 (இ) (உ) ன்படி வட்டாட்சியரின் சான்று பெறப்பட்டுள்ளதாலும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 1037/2018/எப்1**
**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**300.** திருவண்ணாமலை நகராட்சியின் கோடைக்காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க, ஆய்வு செய்து இந்நகரின் 20 இடங்களிலுள்ள ஆழ்துளை கிணற்றினை கீழ்க்கண்டவாறு மதிப்பீட்டு தொகை ரூ.8.00 லட்சத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க அரசுக்கு உரிய பிரேரணை அனுப்பியதன் மூலம், அரசாணை எண். (MS) No.125 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பேரிடர் மேலாண்மை பிரிவு, D.M.III (1) பிரிவு நாள் 28.05.2019ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>பணிகள் கீழ்க்கண்டவாறு</u>

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை நகராட்சியின் டாக்டர்.அம்பேத்கர் தெரு, பச்சையம்மன் கோவில் தெரு, காமராஜர் நகர், முல்லை நகர், பல்லவன் நகர், புதுத்தெரு போளூர் ரோடு, புதுவாணியங்குளத் தெரு, புதுவாணியங்குளம் 2வது தெரு, சின்னகடைத்தெரு ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல். | 4.10 |
| 2 | திருவண்ணாமலை நகராட்சியின் கீழ்நாத்தூர் காலனி, காந்தி நகர், கீழ்நாத்தூர் காலனி செயிண்ட் சேவியர் மேனிலைப்பள்ளி அருகில், பெருமாள் நகர், பெருமாள் நகர் குறுக்குத்தெரு, காந்தி நகர், ராமலிங்கனார் தெரு, இந்திரா நகர், முகல்புரா தெரு, அஜீஸ் காலனி மற்றும் சாரோன் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல். | 3.90 |

மேற்கண்ட அனுமதியின்படி பணி மேற்கொள்ளவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பிரேரணை சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
4. ஒதுக்கீடு செய்யப்படும் தொகைக்கு கூடுதலான தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**301.** இந்நகராட்சியின் பேரிடர் மேலாண்மை திட்டம் 2019ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.8.00 லட்சத்தில் ஆழ்துளை கிணற்றினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள, அரசாணை எண்.(MS) No.125 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பேரிடர் மேலாண்மை பிரிவு, D.M.III (1) பிரிவு நாள் 28.05.2019ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதியின்படி 11.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை நகராட்சியின் டாக்டர்.அம்பேத்கர் தெரு, பச்சையம்மன் கோவில் தெரு, காமராஜர் நகர், முல்லை நகர், பல்லவன் நகர், புதுத்தெரு போளூர் ரோடு, புதுவாணியங்குளத் தெரு, புதுவாணியங்குளம் 2வது தெரு, சின்னகடைத்தெரு ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பழுது | 4.10 | திரு.வி.எம்.ஏழுமலை 64பி, கன்னிக்கோவில் தெரு, திருவண்ணாமலை. | 0.15% குறைவு |
| | | | திரு.எம்.ஜெயபால் ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை. | 0.90% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல். | | | |
| 2. | திருவண்ணாமலை நகராட்சியின் கீழ்நாத்தூர் காலனி, காந்தி நகர், கீழ்நாத்தூர் காலனி செயிண்ட் சேவியர் மேனிலைப்பள்ளி அருகில், பெருமாள் நகர், பெருமாள் நகர் குறுக்குத்தெரு, காந்தி நகர், ராமலிங்கனார் தெரு, இந்திரா நகர், முகல்புரா தெரு, அஜீஸ் காலனி மற்றும் சாரோன் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல். | 3.90 | திரு.வி.எம்.ஏழுமலை 64பி, கன்னிக்கோவில் தெரு, திருவண்ணாமலை. | 0.14% குறைவு |
| | | | திரு.எம்.ஜெயபால் ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை. | 0.80% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1,2ல் கண்டுள்ள திரு.வி.எம்.ஏழுமலை, திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.2338/2019/இ2**

## தீர்மானம்

**302.** இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, குடிநீரில் கலக்க, 2 டன் பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி (ரூ. லிட்டர்) |
|---|---|---|---|
| 1 | Supply and delivery of Bleaching powder as instructed by the departmental engineer in charge including loading, unloading, freight, stacking and transporting charges. | Mr.M.Saravana 54, Then othavadai street Tiruvannamalai | ரூ.40.00 |
| | | Appi Industries, Korattur, Chennai-80 | ரூ.42.00 |
| | | Sri Raja Ganapathy Engineering works, Avadi, Chennai-54 | ரூ.44.00 |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Mr.M.Saravana, Tiruvannamalai அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கு பதியப்படுகிறது.

## தீர்மானம்

**303.** திருவண்ணாமலை நகரம் வார்டு எண்.4, பிளாக் எண். 29, நகரளவு எண்.1794/2எ, அமைந்துள்ள விற்கப்பட்ட மனைகள் 13 எண்ணிக்கை, விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை 28 எண்ணிக்கை என்ற அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி சாமிநாதன் நகர் விஸ்தரிப்பு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களால் ம.வ./ந.ஊ.கி (வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண். 130(R)/2019 எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் வரப்பெற்றுள்ளது. மனுதாரர் திருமதி. சசிகலா க/பெ.சாமிநாதன் மற்றும் திரு.எஸ். ஜெயக்குமார் என்பவர் மேற்படி விற்கப்படாத மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி விற்கப்படாத 28 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்தி தர கோரியுள்ளதன் பேரில் பத்திர ஆவண எண். 1234/2019 நாள் 24.04.2019 சாமிநாதன் நகரில் பொது ஒதுக்கீடு பூங்கா 3511.00 சதுரஅடி, சாலைகள் எண்ணிக்கை. 3, பரப்பு 10,430.50 சதுரஅடி அளவில் நகராட்சி ஆணையர் பெயரில் பத்திர பதிவு தானமாக மேற்படி சாலைகள், பூங்கா இனங்கள் தானமாக பெறப்பட்டுள்ளது. மனுதாரரின் கோரிக்கை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு –**

1. நகல் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண். 5967 / 2018 / வேம.3ல் சாமிநாதன் நகர் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி வந்துள்ள வரைபடம் படி, மேற்படி சாலைகள், பூங்காக்கள் நகராட்சி பெயரில் தானமாக பெற்று பராமரித்து வர மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1345/2018/எப்1**

**நகராட்சி அலுவலகம்** **தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்**

**நாள் – 14.06.2019** **திருவண்ணாமலை நகராட்சி.**

# <u>திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்</u>
## <u>சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

**28.06.2019ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் –**

**முன்னிலை : திரு. Y. சுரேந்திரன் BE., தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ) திருவண்ணாமலை நகராட்சி.**

**<u>பொருட்கள்</u>**

குறள் :–
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

**தீர்மானம்**

**305.** இந்நகராட்சியில் பொது சுகாதாரம் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. பச்சையம்மாள் க/பெ. ராஜாமணி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக விழுப்புரம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய கோரியுள்ள விண்ணப்பத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்

**ந.க.எண். 2594/2019/எச்2**

**தீர்மானம்**

**306.** திருவண்ணாமலை நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனையாளரின் ஒழுங்குமுறை சட்டம் பற்றி துணைவிதிகளையும் நகராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் வைக்கப்பட்டுள்ளது. இதனை குறித்து சாலையோர வியாபாரிகளிடமிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தெரிவிக்க செய்தி மக்கள் தொடர்புத்துறை Adwave Advertising Private limited மூலம் தினமலர் நாளிதழில் 11.01.2019ல் வெளியிடப்பட்டதற்கான தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்
2. இதற்கான செலவினம் ரூ. 3234/– ஐ வருவாய் நிதியில் ஈடு செய்யலாம்.
3. மன்ற அனுமதியை எதிர்நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5462/2016/எப்1**

**தீர்மானம்**

**307.** இந்நகராட்சியில் வார்டு எண். 01 முதல் 39 வரை உள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிகளை நண்பர்கள் ஆடவர்குழு 11 நபர்களின் முலம் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மின் கம்பியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தின கூலியாக ரூ.425/– ம் மின்கம்பி உதவியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ. 320/– ம் வழங்கப்படுகிறது.

தற்போது மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண். F3 /17888/2018 நாள் 19.10.2018 ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள புதிய விலைவிகிதத்தின்படி மின்கம்பியாளர் களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ. 475/–ம் மின்கம்பி உதவியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ. 350/–ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**308.** இந்நகராட்சியில் ஈசான்யம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க PPP Mode On DB FOT Basis ல் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் திட்ட ஆவணங்கள் தயார் செய்ய M/s Sree Deodars Consulter Service சென்னை நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 2,00,000/– ம் மற்றும் GST 18% வழங்குமாறு கோரியுள்ளார்.

இதன்படி நகரமன்ற தீர்மான எண்.20 நாள் 31.01.2019ல் ரூ. 2.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கூடுதலான GST தொகை ரூ. 36,000/– வழங்கவும் செலவினம் தொகை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**309.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு ஆயுள் காப்பீட்டு புதுப்பிக்க வேண்டி உள்ளதால், The New India Assurance Company Ltd., Thiruvannamalai அவர்களுக்கு தொகை ரூ. 70,865/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வாகன எண் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | TN25K 1240 | ரூ. 29,172/– |
| 2. | TN25B 0042 | ரூ. 7,274/– |
| 3 | TN25A 7249 | ரூ. 34,419/– |
| | Total | ரூ. 70,865/– |

**அலுவலக்குறிப்பு: –**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.70,865/–ஐ The New India Assurance Company, Ltd., திருவண்ணாமலை அவர்களுக்கு, மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2370/2019/எச்1**

**தீர்மானம்**

**310.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு ஆயுள் காப்பீட்டு புதுப்பிக்க வேண்டி உள்ளதால் The New India Assurance Company Ltd., Thiruvannamalai அவர்களுக்கு தொகை ரூ. 82,971/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வாகன எண் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | TN25BJ 4102 | ரூ. 11,853/– |
| 2. | TN25BJ 4145 | ரூ. 11,853/– |
| 3 | TN25B J 4160 | ரூ. 11,853/– |
| 4 | TN25B J 4104 | ரூ. 11,853/– |
| 5 | TN25B J 4137 | ரூ. 11,853/– |
| 6 | TN25B J 4179 | ரூ. 11,853/– |
| 7 | TN25A J 6159 | ரூ. 11,853/– |
| | Total | ரூ. 82,971/– |

**அலுவலக்குறிப்பு: –**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.82,971/–ஐ The New India Assurance Company, Ltd., திருவண்ணாமலை அவர்களுக்கு, மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2369/2019/எச்1**

**தீர்மானம்**

**311.** இந்நகராட்சியில் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து அரசு ஆணை எண். GO. Ms Mo.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.02.2006 ன்படி நிரந்தரம் செய்யப்பட்ட பணியாளர்கள் தற்காலிகமாக பணிபுரிந்த காலத்தில் 50% காலத்தை பணிக்காலமாக கருதி பழைய ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்குமாறு கீழ்க்கண்ட பணியாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர்.

| வ.எண். | வழக்கு தொடுத்தள்ள பணியாளர் மற்றும் பதவி | சென்னை உயர்நிதிமன்ற வழக்கு எண் |
|---|---|---|
| 1 | எம். முத்துக்குமார், அலுவலக உதவியாளர் | **WP.10239/2019** |
| 2 | பி. கௌதமன், குடிநீர் உதவியாளர் | WP.10245/2019 |
| 3 | பி. சுரேஷ்குமார், குடிநீர் உதவியாளர் | WP.10249/2019 |
| 4 | கே. நாராயணன், குடிநீர் உதவியாளர் | WP.1025/2019 |

| | | |
|---|---|---|
| **5** | எஸ். சரவணன், மின்பணியாளர் | WP.10256/2019 |
| **6** | டி. சம்பத், பீலி திறப்பாளர் | WP.10253/2019 |
| **7** | எஸ். சங்கர்ராஜன், பொதுக்குழாய் திருகுநர் | WP.10246/2019 |
| **8** | பி. சக்திவேல், குடிநீர் உதவியாளர் | WP.10254/2019 |
| **9** | கே. குமார், பீலி திறப்பாளர் | WP.10243/2019 |

மேற்கண்ட 9 வழக்குகளை நகராட்சி சார்பாக நடத்தும் M/s. ஜி. ராஜேஸ், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்காடு கட்டணம் தலா ரூ. 15,000/– வீதம் மொத்தம் ரூ.1,35,000/– ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**312.** இந்நகரில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் – 2019ஐ முன்னிட்டு வாக்குச் சாவடிகளில் குடிநீர் வசதி செய்தல் மற்றும் தகவல் ஸ்டிக்கர் தயாரித்து சம்மந்தப்பட்ட இடத்தில் ஒட்டும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15)ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சம்) | கொடுத்தள்ள விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. என். ஆறுமுகம்<br>நெ.11, அம்மணியம்மன் நகர்<br>திருவண்ணாமலை | 2.00 | 0.04% குறைவு |
| 2 | திரு.கே.சிவாஜி<br>10எ/1, மாந்தோப்பு தெரு, திருவண்ணாமலை. | | 1.14% அதிகம் |
| 3 | அஸ்வினி கன்ஸ்ட்ரக்ஷன்<br>எண்.37 பேகோபுரம் 10வது தெரு<br>திருவண்ணாமலை. | | 2.25% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.என். பிச்சாண்டி திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கு பதியப்படுகிறது.

## தீர்மானம்

**313.** இந்நகராட்சியில் பாராளுமன்ற தேர்தல் – 2019 முன்னிட்டு வாக்கு எண்ணும் மையங்களான சண்முகா மேல்நிலைப் பள்ளி மற்றும் மார்க்கெட் கமிட்டி ஆகிய இடங்களில் நடமாடும் கழிப்பிடம் அமைத்து நடமாடும் கழிப்பிடத்திற்கு பைப் லைன் அமைத்தல் மின்வசதி செய்தல் தண்ணீர் வசதி செய்தல் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.1.60 லட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீர் மேற்கொள்ளலாம்

ந.க.எண். 1634/2019/இ2

**தீர்மானம்**

**314.** பாராளுமன்ற தேர்தல் – 2019 இந்நகராட்சியின் சண்முகா மேநிலைப் பள்ளி, செங்கம் ரோடு மற்றும் மார்க்கெட் கமிட்டி திண்டிவனம் ரோடு ஆகிய வாக்கு எண்ணும் மையங்களில் நடமாடும் கழிப்பிடம் அமைத்து பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 17.05.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்ற அங்கீகாரத்துக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சம்) | கொடுத்தள்ள விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. என். பிச்சாண்டி<br>சேந்துகிணறு தெரு, தேனிமலை<br>திருவண்ணாமலை | 1.60 | 0.09% குறைவு |
| 2 | திரு. வி.என். பிரகாஷ்<br>கரிகாலன் தெரு, திருவண்ணாமலை | | 1.38% அதிகம் |
| 3 | அஸ்வினி கன்ஸ்ட்ரக்ஷன்<br>எண்.37 பேகோபுரம் 10வது தெரு<br>திருவண்ணாமலை. | | 2.48% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.என். பிச்சாண்டி திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**315.** இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 10மெட்ரிக் டன் குளோரின் கேஸ் சிலிண்டர் சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி சட்டம் 1920 பிரிவு (15) ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | கொடுத்தள்ள விலைப்புள்ளி (மெட்ரிக் டன் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகப் பணியில் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 10 மெட்ரிக் டன் குளோரின் கேஸ் சிலிண்டர் சப்ளை செய்தல் | Tamil Nadu Chemicals Industries, Chennai-62 | ரூ. 20650/– |
| | | Sruthi Alum Industry Chennai - 53 | ரூ. 22125/– |
| | | Jentex Alkalis, Chennai - 32 | ரூ. 24650/– |

**அலுவலகக் குறிப்பு**

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Tamil Nadu Chemicals Industries Chennai – 62 அவர்களின் விலைப்புள்ளியை அங்கீகரித்து, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கு பதியப்படுகிறது.

**தீர்மானம்**

**316.** இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN25 AH 8123 ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நேரடியாக Jain Cars & Auto Sales Pvt Ltd Tiruvannamalai என்ற நிறுவனத்திடம் பழுது நீக்கம் செய்தமைக்கு ரூ. 7029/– ஐ மேற்படி நிறுவனத்தாரருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. இச்செலவினம் வருவாய் நிதியின்
3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**317.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 37 மற்றும் 39 குடிநீர் விநியோகம் பகிர்மான குழாய் பதிக்கும் பணி திருவள்ளுவர் நகர் அருகில் இருந்து காமராஜர் நகர் வரை குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி (6PVC) மற்றுறும இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 3.75 லட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**318.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 கீழ்நாத்தூர் காலணி அம்மணியம்மன் நகர் பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் வசதி செய்திட இரண்டு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 4.00 லட்சம் (நான்கு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**319.** இந்நகராட்சி வார்டு எண். 23 தென்மாத்தாதி தெருவின் சாலை பழுதடைந்து உள்ளதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமம் ஏற்படுவதால் பொது மக்களின் நலன் கருதி மேற்படி சாலையை செப்பணிட ஆகும் தோராய செலவினம் ரூ. 7.00 லட்சம் (ஏழு லட்சம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**320.** இந்நகராட்சி வார்டு எண்.வார்டு எண்.38, கீழ்நாத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தில் மேற்படி பள்ளியில் அடிப்படை வசதிகள் இல்லாததால் மாணவர்கள் சிரமப்படுவதால் கழிவறைகள் அமைத்தல், டைல்ஸ் பதித்தல், வண்ணப்பூச்சு பணிகள் நுழைவு வாயில் கேட் அமைத்தல், ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் இதர பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார். இதன்படி மாணவர்களின்

நலன் கருதி மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும். தோராய செலவினம் ரூ. 9.50 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. கல்வி நிதயின் கீழ் செலவிடலாம்.

## தீர்மானம்

**321.** இந்நகராட்சி வார்டு எண்.6 பேகோபுரம் 2வது தெரு மற்றும் ஜொனகரை பாரை தெரு பகுதியில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் சிரமம் ஏற்படுவதால் மேற்படி சாலையை புதுப்பிக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 3.30 லட்சம் (மூன்று லட்சத்து முப்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

## தீர்மானம்

**322.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள சோமவாரகுளம் நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 20HP நீர்மூழ்கி மோட்டாரின் காயில் பழுதாகியும் ஸ்டாட்டர் பழுதாகி உள்ளதால் குடிநீர் விநியோகப் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், மேற்படி மோட்டாரின் காயில் பழுது நீக்குதல் புதியதாக ஸ்டாட்டர் பொறுத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

## தீர்மானம்

**323.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள சோமாவரகுளம் நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 20HP நீர் மூழ்கி மோட்டாரின் காயில் பழுது நீக்குதல் புதியதாக ஸ்டாட்டர் பொருத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 21.06.2019ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் இஞ்ஜிரிங் ஒர்க்கஸ் நெ. 64 கன்னிக்கோயில் தெரு, தி.மலை உரிமை : வி.எம். ஏழுமலை | 1.00 | ரூ. 99125/– |
| 2 | ஜெயபால் ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 59 ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை | | ரூ. 101200/– |
| 3 | குப்புசாமி ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 90/2 சூர்யா நகர் திருவண்ணாமலை | | ரூ. 101315/– |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஸ்ரீ ஏழுமலையான் ரீவைண்டிங், திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மேலும் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**324.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள அண்ணாநகர் நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் எண்.1 ன் பம்பு பழுது ஏற்பட்டுள்ளதால் குடிநீர் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளதால் உடன் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 லட்சம் (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

## தீர்மானம்

**325.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள அண்ணாநகர் நீரேற்று நிலையத்தில் உள்ள மோட்டார் எண்.1ன் பம்பு ஸ்டாட்டர் பழுது நீக்குதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 05.07.2019ல் பெறப்பட்ட விலைப்புள்கள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் இஞ்ஜிரிங் ஒர்க்கஸ் நெ. 64 கன்னிக்கோயில் தெரு, தி.மலை உரிமை : வி.எம். ஏழுமலை | 1.50 | ரூ. 148950/– |
| 2 | ஜெயபால் ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 59 ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை | | ரூ. 149700/– |
| 3 | குப்புசாமி ரீ வைண்டிங் ஒர்க்கஸ் நெ. 90/2 சூர்யா நகர் திருவண்ணாமலை | | ரூ. 150250/– |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஸ்ரீ ஏழுமலையான் ரீவைண்டிங், திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மேலும் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**326.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள சமுத்திரம் ஏரி நீரேற்று நிலையத்தில் உள்ள (1)7.5HP போர்வெல் மோட்டார்கள் –2 (2) 5HP மின் மோட்டார்கள் – 2 எ (3) 12.5HP போர்வெல் மோட்டார்–1 (4) 7.5HP ஸ்டாட்டர்கள் –2 எ பழுது ஏற்பட்டுள்ளதால் குடிநீர் விநியோகம் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே தற்போது கோடைக்காலம் என்பதால் பொது மக்களின் நலன் கருதி உடன் பழுது நீக்கம் செய்தல் புதியதாக பொறுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.1.80 லட்சம் (ஒரு லட்சத்து எண்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**327.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் கடிதம் ந.க.எண். K.Dis No.3253/P3 / 2017 நாள் 24.03.2017 ந் தேதிய செயல்முறை உத்திரவு மற்றும் இந்நகரமன்ற தீர்மான எண். 569 நாள் 29.12.2017 ந் தேதிய தீர்மானத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் இந்நகரில் உள்ள 39 வார்டுகளிலும் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்றிட ஒப்பந்த அடிப்படையில் 301 நபர்களுக்கு மிகாமலும் 200 நபர்களுக்கு குறையாமல் ஆண்கள் மற்றும் பெண்கள் 2:1 விகிதத்தில் பணியாளர்கள் சப்ளை செய்திட 15.05.2018 முதல் 14.05.2019 வரை பணியினை செய்ய இவ்வலுவலக ந.க.எண்.3373/2016/எச்1 நாள் 07.05.2018 தேதிய உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வரும் கிரீன் வாரியர், திருவள்ளூர் அவர்கள் தனது 02.04.2019ந் தேதிய கடிதத்தில் 14.05.2019 வரை ஒப்பந்த பணி முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தப்பணியை மீண்டும் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்து வழங்க கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்த நீட்டிப்பு செய்வது தொடர்பாக கடந்த ஆண்டு ஒப்பந்த மதிப்பு தொகையில் 9% சதவீதம் உயர்த்தி தர கோரியுள்ளார். எனவே கோப்பின் அடிப்படையில் 15.05.2019 முதல் 14.05.2020 வரை கிரீன் வாரியார் திருவள்ளூர் அவர்களுக்கு மீண்டும் ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டும் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்களை சப்ளை செய்யும் கிரீன்வாரியார் திருவள்ளூர் அவர்களுக்கு 15.05.2019 முதல் ஓர் ஆண்டு நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்
3. முதலாம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்பந்த தொகையிலிருந்து 9% சதவீதம் கூடுதலாக வழங்க கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகராட்சி அலுவலகம்** **தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ)**

**நாள் – 28.06.2019** **திருவண்ணாமலை நகராட்சி.**

**தீர்மானம்**

**320.** இந்நகராட்சி உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள RAW Water ல் உள்ள 30HP மின் மோட்டார் 2 எண்கள் பழுதாகி உள்ளதால் குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதால் மேற்படி மோட்டார்கள் பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.20 லட்சம் (ஒரு லட்சத்து இருபதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**321.** இந்நகராட்சி உலாகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Raw Water ல் 30HP மின் மோட்டார் 2 எண்கள் பழுதாகி உள்ளதை பழுது நீக்குதல் பணிகள் மேற்கொள்ள 10.07.2019ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் இஞ்ஜிரிங் ஒர்க்கஸ்<br>நெ. 64 கன்னிக்கோயில் தெரு, தி.மலை | 1.20 | ரூ. 118500/– |
| 2 | ஜெயபால் ரீ வைண்டிங் ஒர்க்கஸ்<br>நெ. 59 ராஜராஜன் தெரு,<br>திருவண்ணாமலை | | ரூ. 119500/– |
| 3 | குப்புசாமி ரீ வைண்டிங் ஒர்க்கஸ்<br>நெ. 90/2 சூர்யா நகர்<br>திருவண்ணாமலை | | ரூ. 119560/– |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஸ்ரீ ஏழுமலையான் ரீவைண்டிங், திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மேலும் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.